1973 பிப்ரவரி 6]

திரு. கே. என். குமாரசாமி : உதவித் தலைவர் அவர்களே, பெண்களை வைத்துக் கள்ளக்கடத்தல் செய்யும் நிலைமை உருவாக்கப் பட்டுள்ளதே, அதை விரைவில் கண்டுபிடிக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கடத்தல் காரியங்களில் ஈடுபடும்போது அந்தப் பெண்கள் கைது செய்யப்படுகிறார்கள். முதலிலேயே சந்தேகப்பட்டு இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுவது அவ்வளவு பொருத்தமாக இல்லாத காரணத்தால்தான் அவர்கள் அந்தக் காரியங்களுக்கு ஈடுபடுத்தப்படும்போது போலீசாரால் கைது செய்யப்படுகிறார்கள்.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறை

* 23 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—உள் ஆட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழக தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் தமிழ் ஆராய்ச்சித் துறையில், தமிழ் ஆராய்ச்சி வல்லுநர்களும் கல்வெட்டு ஆராய்ச்சி வல்லுநர்களும் இடம் பெற்றுள்ளனரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தொல்பொருள் ஆராய்ச்சித் தமிழ் ஆராய்ச்சி வல்லுநர் என்ற தனித்ததொரு பதவி கிடையாது. கல்வெட்டு ஆய்வாளர் என்றும், அகழ்வாய்வாளர் என்றும் பதவிகள் உள்ளன. இவற்றில் பதவி வகிப்பவர்கள் தமிழில் திறன் பெற்றவராய் இருத்தல் வேண்டும் என்பது விதி.

Recruitment of teachers for elementary schools

*24 Q.—Thiru N. K. Palaniswamy : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of teachers to be recruited for the elementary schcools in the State during 1972?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சுமார் 3,470 பேர்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிபெற்று 30 வயதை எட்டியிருக்கின்ற பல ஆசிரியர்கள் வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, எங்கள் மாவட்டத்தில் ஒருசில ஆசிரியர்கள் உண்ணா நோன்பு மேற்கொண் டிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா ?